[1994 ஏப்ரல் 27

409—

உத்திரமேரூர் தாலுகாவைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்

35611—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:***

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தாலுகாவைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய (Industrially Backward Area) பகுதியாக அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தைத் தொழிலில் பின்தங்கிய வட்டமாக அரசு ஏற்கனவே அறிவித்துள்ளதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பின்தங்கிய வட்டங்கள் எத்தனை? மிகவும் பின்தங்கிய வட்டங்கள் எத்தனை? அவைகளுக்கு எத்தகைய சலுகைகள் அளிக்கப்படுகின்றன? அத்துடன் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் எத்தனை வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகச் செயல்படுகின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்ற உத்திரமேரூர் வட்டத்தை பின்தங்கிய வட்டமாக ஏற்கனவே அறிவித்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவரையில் அந்த நிலையில் அது இல்லை. அல்லது அவர்கள் சொல்லி இருப்பதால் அது மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என்று நம்பி, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் இப்போது அதை அறிவிப்பார்களா என்று கேட்பதுடன், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழில் துறையைப் பொறுத்தவரையில் நம் நாட்டில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டில் இருப்பவர்கள் கூட இங்கே வந்து தொழில் தொடங்க முன்வர வேண்டுமென்று முன்முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற உத்திரமேரூர் வட்டத்தைப்

1994 ஏப்ரல் 27]

பின்தங்கிய வட்டமாக அறிவித்து அங்கே தொழில்களைத் தொடங்க அரசு முன்வருமா என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 113 வட்டங்களில் 31 வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள். இதில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 7 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகவும், ஒரு வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மிகவும் பின்தங்கிய வட்டம் பள்ளிப்பட்டு, பின்தங்கிய வட்டங்கள் ஊத்துக்கோட்டை, பொன்னேரி, காஞ்சிபுரம், திருத்தணி, செய்யார், மதுராந்தகம், உத்திரமேரூர். பின்தங்கிய வட்டங்களுக்கு அரசு அளிக்கிற சலுகைகள் என்னவென்றால் மூலதன உதவித் தொகையாக ரூபாய் 15 இலட்சம் சலுகையாக அளிக்கப்படுகிறது. அதாவது மூலதனத்தில் 15 சதவீதம், அதிகபட்சம் 15 இலட்சம் ரூபாயை மூலதன உதவித் தொகையாக அரசு அளிக்கிறது. அதைப்போல விற்பனை வரி செலுத்துவதை 9 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கிறோம். மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு 20 சதவீதம் மூலதன உதவித் தொகை வழங்கப்படுகிறது. அந்தத் தொகை 20 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கும். விற்பனை வரியைப் பொறுத்தவரையில் 5 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்கிறோம் அல்லது 9 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 410, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

410—

சேலம் மாவட்டத்தில் அரசு தொட்டில்களில் போடப்பட்டுள்ள குழந்தைகளைப் பராமரித்தல்

*** 20307**—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை குழந்தைகள் அரசு தொட்டில்களில் போடப்பட்டுள்ளன?